**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.280/2019**

**29.07.2025**

**P.W.1- செல்வம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்திற்கு எனது பெயரிலும், மற்ற வாதிகள் பெயரிலும் பட்டா இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண்.95-4ல் 55 சென்டு நிலத்திற்கு கருத்துவீரன் பெயரில் எந்த ஆவணமோ, பட்டாவோ இல்லையென்றால் சரிதான். கருத்துவீரனின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.95-4ல் வாக்கீரால் கிரையம் பெற்றதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். முத்துபின்னத்தேவர் எனது தாத்தா என்றால் சரிதான். முத்துபின்னத்தேவர் எனது தாத்தா என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், முத்துபின்னத் தேவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. முத்துபின்னத்தேவர் கிரையம் பெற்ற சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. முத்துப்பின்னத்தேவரின் வாரிசுகளாக கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கொடிவழி ஜாபிதாவை உறுதிபடுத்துவதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்துப்பின்னத்தேவரின் வாரிசுகளை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் எல்லா வாரிசுகளையும் சேர்த்துள்ளேன். முத்துபின்னத்தேவருக்கு வீரக்காள், சின்ன வீரம்மாள் என இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். 1வது மனைவி வீரக்காளுக்கு பிறந்தவர்கள் சுப்பிரமணி, வேங்கைபுலி (எ) பழனியாண்டித்தேவர், தேட்டாளன் (எ) வீரணன் என மூவர் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி சுப்பிரமணிக்கு நான், முருகன், கண்ணன், ரங்கநாதன், பாக்கியம் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். வேங்கைபுலி (எ) பழனியாண்டித்தேவருக்கு சின்னவீரம்மாள், புலிமுருகன், பின்னியம்மாள் என மூவர் வாரிசுகள் என்றால் சரிதான். தேட்டாளன் (எ) வீரணனுக்கு மணிமாறன், விஜயன், லட்சுமி, சிவனம்மாள், தர்மேந்திரன் வாரிசுகள் என்றால் சரிதான்.

முத்துபின்னத்தேவரின் 2ம் மனைவி சின்ன வீரம்மாள் கருத்துஏட்டு (எ) பின்னத்தேவர், சுப்பையா, சங்குமாயன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். கருத்துஏட்டு (எ) பின்னத்தேவருக்கு ஜெயக்கொடி, சிவகாமி, மீனாட்சி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சுப்பையாவுக்கு முத்து, பிரபா ஆகியோர் வாரிசு என்றால் சரிதான். சங்குமாயனுக்கு சர்மா, விஜயசர்மிளா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்கள் அனைவரும் முத்துபின்னத்தேவரின் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்களை வழக்கில் தரப்பினரர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்குறித்து சக்கரையம்மாள், பாக்கியம், வீரணன் ஆகியோர்கள் மாணிக்கம் மற்றும் சமுத்திரபாண்டிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி மாணிக்கம் மற்றும் சமுத்திரபாண்டி பிரதிவாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சக்கரையம்மாள், பாக்கியம், வீரணன் ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சக்கரையம்மாளின் கணவர் அன்னக்கொடிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அன்னக்கொடித்தேவர், முத்துபின்னத்தேவரின் மருமகன் ஆவார். மேற்படி சக்கரையம்மாள் எனக்கு அத்தையாவார். அன்னக்கொடித்தேவர் இறந்தபின்பு அவரது மனைவி சக்கரையம்மாள், மகன்கள் நாகராஜ், வீரணன் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். 2005ல் தான் தாவா சொத்திற்கு பட்டா வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நாகராஜ், அவரது மனைவி பாக்கியம், மகன் கண்ணன் (எ) வீரணனை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். கடந்த 09.06.2011ல் சக்கரையம்மாள், பாக்கியம், வீரணன் தாவா சொத்துக்குறித்து மாணிக்கம் மற்றும் சமுத்திரபாண்டிக்கு பவர் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் 12.03.2014ம் தேதி தாவா சொத்தை பிரதிவாதி தகுந்த மறுபயனுக்கு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய நாள்முதல் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் போய் இடைஞ்சல் செய்தேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். போலீசார் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறித்தினார்கள். தாவா சொத்தில் எனக்கும், மற்ற வாதிகளுக்கும் எந்த

உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கில் தேவையான தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் கூறியுள்ள வழக்கு மூலம் கற்பனையானது என்றால் சரியல்ல. எனக்கு எழுத, படிக்க தெரியும். எனது மகள் பெயர் உஷா. 11.03.2020ல் நான், எனது மகளுக்கு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். சக்கரையம்மாள் சொத்தை எனது மகளுக்கு தானமாக கொடுப்பதாக எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். சக்கரையம்மாள் கொங்கப்பட்டியில் தான் உள்ளார். சக்கரையம்மாள் சீமானூத்து கிராமத்தில் இறந்ததாக இறப்பு சான்று வாங்கி மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தில் இணைத்துள்ளேன் என்றால் சரிதான். இதுபோன்று நிறைய மோசடிய ஆவணங்களை உற்பத்தி செய்து எனது வழக்கு என்றால் சரியல்ல. எனது அத்தையை எனது அம்மா என குறிப்பிட்டு பத்திரம் போட்டதால் மேற்படி பத்திரம் செல்லா நிலையது என்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.29 16:42:05 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.